# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்). சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, மே மாதம் 2 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 12.00 தபாற் செலவு : ரூபா 5.00

## 2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ (கூட்.) 25/2004

### எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பு" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமானதொரு அமைப்பு, அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கமையச் சொல்லப்பட்ட அமைப்பின் குறிக்கோள்களுடன் தொடர்புடைய அனைத்துக் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துடன் இலங்கையில் ஏற்கனவே தாபிக்கப் பட்டிருப்பதனாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட அமைப்பானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் அமைக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட அமைப்பானது வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் ; அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "அமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பின் தற்போதைய உறுப்பினர்களாக அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதன் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "எமது குழந்தைகள் ஒழுங்கமைப்பு" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்

கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடரலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொதுஇலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்து வமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) நாட்டின் ஒரு பரம்பரையான வளமாக மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் அங்கீகாரத்தை மேம்படுத் தல் ;

(ஆ) முறையான ஆலோசனைகள் மூலமும் மற்றும் அதற் கிணங்க அவசியமான சிகிச்சைகளை வழங்குவதன் மூலமும் மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்காக விசேட சிகிச்சைகளை நிர்ணயித்தல் ;

(இ) மெதுவாக மன அபிவிருத்தி பெறும் பிள்ளைகளுக்கான வீடு சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தல் ;

(ஈ) மெதுவாக மன அபிவிருத்தி பெறும் பிள்ளைகளுக்கான விசேட கல்வியை வழங்குதல் ;

(உ) மெதுவாக மன அபிவிருத்தி பெறும் பிள்ளைகளுடன் செயற்படுகின்றதும், கவனிக்கின்றதுமான பெற்றோர் கள், பாதுகாவலர்கள் மற்றும் பல்வேறு ஆட்களுக்கும் பயிற்சியளித்தல் ;

(ஊ) இலங்கையின் மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் சேமநலனுக்காக உள்ளூர் மற்றும் சர்வதேச ஒழுங் கமைப்புகளிடமிருந்து ஆதரவு மற்றும் உதவியைப் பெறுதல் ;

(எ) மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் தேவைகள் தொடர்பாக சமூக விழிப்புணர்வுக்காக பிரசாரம் செய் தல் ;

(ஏ) மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் பொதுவான எல்லா சேமநலனுக்காக செயற்படுவது சமூகத்தின் அடிப்படையான கடமை என்ற சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் வேறுபட்ட கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் ஒழுங்குபடுத்தல் ;

(ஐ) மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் தேவைகளை திருப்தி செய்வதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட பொருத்தமான அமைவிடத்தில் அவசியமான நிறுவனங்களை தாபித்தல் ;

(ஒ) மனவளர்ச்சியடையாத பிள்ளைகள் பெரியவர்களாகி பாதுகாப்பையிழக்கும் தறுவாயில் அவர்களை உயிருள்ள வரையில் பராமரித்தல் ; அத்துடன்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை சீரமைக்கவும், மேம்படுத்தவும் உகந்ததெனக் கூட்டுத்தாபனம் கருதும் புத்தகங்கள், பருவ வெளியீடுகள், பத்திரிகைகள், புதினப்பத்திரிகைகள் மற்றும் மஞ்சரிகள் போன்றவற்றை அச்சிடுதலும், விளம்பரப்படுத்தலும், விநியோகித்தலும்.

கூட்டுத்தாபனத்தின அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க, தெரிவு செய்யப்படக்கூடியவாறான தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் அத்தகைய வேறு உறுப்பினர்களைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஒழுங்கமைப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் பதவி வகித்தவர்களே கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் இருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் இடாப்பு.

5. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முந்திய திகதியில் அமைப்பில் உறுப்பினராக இருந்த ஒவ்வொருவரினது பெயர்களும் மற்றும்

அதன் பின் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக முறைப்படி சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஒவ்வொருவரினதும் பெயர்களும் உள்ளடக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் இடாப்பொன்றைப் பேணுவதனை ஒழுங்குகளைச் செய்வித்தல் வேண்டும்.

சொத்துக்களைக் கொள்ளுதல் நிதிகளை முதலீடு செய்தல், கடன் பெறுதல் முதலிய கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்.

6. இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வருவனவற்றைச் செய்வதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துக்காகத் தேவைப்படும் காணிகளை அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கும், கொள்ளுவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும், நிறுவுவதற்கும் அல்லது வேறு வகையில் பெறவும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துக்காக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள், நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களையும் உதவிகள், கொடைகள் என்பவற்றையும் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பெறவும் ;

(இ) செலாவணி உண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள், காசோலைகள், அத்துடன் ஏனைய கைமாற்றம் செய்யக்கூடிய சாதனங்களைத் தயாரிக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், வழங்கவும் மற்றும் வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், மூடிவிடவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடன்தேவைப்படாத ஏதேனும் நிதிகளை சபை பொருத்தமானதெனக் கருதும் விதத்தில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) உதவு தொகைகள், கொடைகள், மானியங்கள் மற்றும் எல்லா வகையிலுமான நன்கொடைகளைக் கோரவும், கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளொருவருடன் ஏதேனுமொரு கம்பெனியோடு அல்லது ஆட்கள் குழுவொன்றோடு உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செய்யவும் ;

(எ) ஏதேனும் நிலையான சொத்துக்கு அல்லது தனிப்பட்ட சொத்துக்கு ஏற்புடையவையே ஏதேனும் சட்டப்படியான நம்பிக்கைப் பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், நடைமுறைப் படுத்தவும், நிறைவேற்றவும், நிர்வகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களை, சேவையாளரை நியமனஞ் செய்யவும், சேவையில் ஈடுபடுத்தவும், பதவி நீக்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் முடிவுசெய்கின்றவாறான சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஊழியரைப் பயிற்றுவிக்கவும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களைச் சரியாகவும், பயனுறுதியாகவும் நடைமுறைப்படுத்த அவசியப்படுகின்ற அல்லது உசிதமானவாறான செய்ய வேண்டிய எதையும் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) ஏதேனுமொரு சபைக் கூட்டத்தின்போது அதற்கு சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளினால் இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் முரணாக இல்லாத விதிகள் பின்வரும் விடயங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அதில் எவற்றுக்கேனும் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை இனம் பிரித்தல், ஒவ்வொரு வகுப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள், அவர்களைச் சேர்த்துக் கொள்ளல், அவர்களை அகற்றுதல் அல்லது விலக்குதல் ;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையைத் தெரிவுசெய்து நியமித்தல், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் பதவி தாங்குநர்கள் தமது பதவிகளை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல், சபையின் கடமைகள் மற்றும் நடத்தை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர், முகவர்கள், ஊழியர்களை நியமனஞ் செய்தல், அவர்களின் அதிகாரங்கள், செயல்கள், பணிகள் மற்றும் நடத்தை என்பன ;

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது ஏதேனுமொரு உபகுழுவின் கூட்டங்களின்போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறை, அக்கூட்டங்களை கூட்டுதலும், நடாத்துதலும் அக்கூட்டங்களின்போது வெற்றிடங்களை நிரப்புதல், அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல்கள் கூட்டங்கள் பற்றிய கூட்ட நடப்பெண்ணும் மற்றும் கூட்டத்தை நடாத்துதலும்;

(உ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும், உறுப்பாண்மைக்கான தகைமைகளும், தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை நிர்வகித்தல், முகாமை செய்தல் மற்றும் அதன் நோக்கங்களை நிறைவேற்றுதல் ;

(எ) பத்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மதியுரைச் சபையின் பணிகளையும், கடமைகளையும் தீர்மானித்தல்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் (1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட அதன் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

8. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் நிதியாண்டு ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி முதலாம் திகதியிலிருந்து தொடங்கி அவ்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்கு அன்பளிப்பு, நன்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்புகள் மாற்றங்கள், ஒப்பப்பணம் உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியங்கொடைகள் என்ற வகையாகக் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

மேலும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது சேமிப்பு அல்லது நடைமுறைக்கணக்கொன்றில் பணம் வைப்பிலிடக்கூடிய அரசாங்க அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றைத் தீர்மானித்தல் வேண்டும்.

9. (1) கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற்றதும், கூட்டுத்தாபனத்தால் செலவு செய்யப்பட்டதுமான தொகைகளைப் பற்றிய உரிய முறையில் கணக்குகளை வைத்திருக்கப் பொருளாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கணக்குகள்.

(2) ஒவ்வொரு ஆண்டிலும் கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பரிசோதகர்களினால் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த இறுதிக் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட கணக்காய்வு அறிக்கை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. (1) கூட்டுத்தாபனமானது, விசேட பொதுக்கூட்டமொன்றில், அதில் சமூகமாகவிருக்கும் உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையொன்றுடன் ஆறு உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்களைக் கொண்டமைந்த மதியுரைச் சபையொன்றை உருவாக்கலாம். மதியுரைச் சபை.

(2) அவ்வாறு நியமிக்கப்பட்ட மதியுரைச் சபையின் முதன்மைப் பணியானது, நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை எம்முறையில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்த முடியும் என மதியுரைப்பதாக இருத்தல் வேண்டும்.

(3) மதியுரைச் சபையின் உறுப்பினரொருவர், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் கூட்டத்தில் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் ஏதேனும் கூட்டத்தில் அல்லது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் குழுவில் சமுகமாகவிருக்கவும், உரையாற்றவும் உரித்துடையதாதல் வேண்டும். ஆனால் வாக்களிக்க உரித்துடையவராதல் ஆகாது.

ஒழுங்கமைப்பால் செலுத்தப்படற்பாலனவும், அதற்கு வருமதியானவையுமான தனிசுகள்.

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று இருந்த ஒழுங்கமைப்பின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று ஒழுங்கமைப்புக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அதற்குச் செலுத்தப்படற்பாலதான ஒப்பப் பணங்களும், உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கலைப்பின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதும் அதன் கடன்கள், பொறுப்புக்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் ஆதனம் எதுவும் எஞ்சியிருக்குமெனில் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும், ஏதேனும் வருமானம் அல்லது இலாபம் அதனது அல்லது அவர்களது உறுப்பினர்களுக்கிடையே பங்கிடப்படுவதிலிருந்து தடை செய்கின்ற விதி அல்லது விதிகளைக் கொண்டதுமான வேறு சில கழகத்துக்கு அல்லது கழகங்களுக்கு வழங்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனத்தைக் கலைக்கும்போது அல்லது கலைப்பதற்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்என்பதுடன், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் என்பதுடன், தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரது முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலுமாகாது ; அவர்கள் சமுகமாயிருந்ததற்கு சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராக கையொப்பமிடுதலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

14. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசின் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

15. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொலஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்